# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 (2023)**
**General Certificate of Education (Ord.Level) Third Term Examination- 2022 (2023)**

| நேரம்: 1.00 மணித்தியாலங்கள் | சித்திரக்கலை - I | பாட எண் : 43 T I |
|---|---|---|
| பெயர் / சுட்டெண் ........................................................................ | | |

➢ **எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலே விடை எழுதுக.**
➢ **கீழே தரப்பட்ட ஒளிப்படத்தைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 5 வரையான வினாக்களிலுள்ள இடைவெளியை நிரப்புக.**





1. சிறிய தாதுகோபங்களை இயற்கைத் தாக்கங்களிலிருந்து பாதுகாக்கும் நோக்குடன் அமைக்கப்பட்ட இக் கட்டிட அமைப்பு ....................................................என அழைக்கப்படுகிறது.
2. இக்கட்டிடம் ..............................................................காலத்துக்குரிய கட்டிடக் கலைப் பண்புகளையுடையது.
3. இதன் படிவரிசையின் செங்குத்தான பரப்பில் அலங்காரத் தன்மையுடைய ....................................... வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.
4. இதன் வடக்கு வாயிலில் .....................................வடிவமுடைய காவற்கல் அமைக்கப்பட்டுள்ளது.
5. இதன் நான்கு திசைகளையும் நோக்கியவாறு......................................... நிலையிலுள்ள புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

➢ **6 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு சரியான விடை எழுதுக.**

6. மட்பாண்டக் கூடம், ஆவணி ஊர்வலம் ஆகிய ஓவியங்களை வரைந்த இலங்கை ஓவியக் கலைஞர் யார்?.......................................................................................................................
7. முகமூடிக் கைத்தொழிலில் பளபளப்பு,பாதுகாப்பு போன்றவற்றுக்காகப் பயன்படுத்தப்பட்ட எண்ணெய் எது? ..............................................................................................................
8. கல்விகாரை அமர்ந்த நிலைப் புத்தர் சிலைகளில் புத்தமதத்தினது எப்பிரிவின் செல்வாக்கு காணப்படுகிறது?.......................................................................................................
9. வானவன் மாதேவி ஈசுரமுடையார் எனப்படும் பொலநறுவை இரண்டாம் சிவாலயத்தில் கர்ப்பக்கிரகத்தின் விமான அமைப்பின் வடிவம் யாது?.............................................................
10. ஐரோப்பிய மறுமலர்ச்சிக் கால ஓவியரான மைக்கலாஞ்சலோவால் சிஸ்ரைன் தேவாலயத்தில் வரையப்பட்ட மிகப்பெரிய சுவரோவியம் எது?..................................................


kalvi.lk

➢ *11* தொடக்கம் *15* வரையுள்ள ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரே தரப்பட்டுள்ள படத்துடன் மிகவும் தொடர்புபட்டுள்ள A,B,C,D,E எனத் தரப்பட்டுள்ள படங்களிலிருந்து தெரிவு செய்து அதனைக் குறித்து நிற்கும் ஆங்கில எழுத்தை வினாவின் பொருத்தமான படத்திற்கு எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

11  (……… )  A

12  (……… )  B

13  (……… )  C

14  (……… )  D

15  (……… )  E



kalvi.lk

➢ ***16 தொடக்கம் 20 வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.***

16. கண்டி தாழ்நாட்டுப் பண்புகளைக் கொண்ட ''மகாதன'' செல்வந்தரின் கதை எனும் ஓவியம் காணப்படும் இடம்?

1. கத்தளுவ  2. கரகம்பிட்டிய  3. முல்கிரிகல விகாரை  4. மெதவல

17. கனவடிவவாத ஓவியப்பாணியின் செல்வாக்குடன் வரையப்பட்ட சேவற்சண்டை என்ற ஓவியம் யாரால் வரையப்பட்டது?

1. ஸ்ரான்லி அபேசிங்ஹ  2. கே.கனகசபாபதி  3. ஏ. மார்க்  4. ஜி. எஸ்.பெர்ணாந்து

18. இந்தியாவின் மாமல்லபுரத்து "கங்காவரோகணச்" செதுக்கல்களை ஒத்திருக்கும் இசுருமுனிய விகாரை செதுக்கல் எது?

1. காதலர் சிலை  2. அரசகுடும்பம்
3. குதிரைத்தலையும் மனித வடிவமும்  4. நீராடும் யானைகள்

19 பொத்குல் விகாரை சிலையின் கைகளில் தாங்கப்பட்டுள்ள பொருள் எதனைக் குறிக்கிறது என பேராசிரியர் பரணவிதான கூறுகிறார்?

1. நுகத்தடி  2. ஏடு  3. அரசு  4. சாசனம்

20. கம்பளைக் காலத்தில் கணேஸ்வராச்சாரி என்ற கலைஞரின் தலைமையில் அமைக்கப்பட்ட பௌத்த சமயக் கட்டடக்கலை நிர்மாணிப்பு எது?

1. இலங்காதிலக விகாரை  2. எம்பக்கே 3. கடலாதெனிய விகாரை 4. தம்புள்ள விகாரை.

➢ ***21 தொடக்கம் 25 வரையுள்ள சொற்களின் பொருள் விளங்கும் வகையில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு கருத்துள்ள வாக்கியங்கள் எழுதுக.***

21. துடுப்பு (பத்த) :- ……………………………………………………………………………

……………………………………………………………………………………………………

22. ஹர்மிகா :- ……………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

23. ஸ்கிறைப் :- ……………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

24. ஹங்கிடியன் :- ………………………………………………………………………………

……………………………………………………………………………………………………



kalvi.lk

25 ரத்வத்த :- ..................................................................................................................

..................................................................................................................

- ***26 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு* L,M,N,O,P *என்னும் ஒளிப்படங்களை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.***


L


M


N


O


P

26. L எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ள புத்தர் சிலை அமைந்துள்ள குகை எவ்வாறு அழைக்கப்படும்?..................................................................................................

27. M இனால் காட்டப்பட்டுள்ள மடோனா ஓவியத்தினை வரைந்த மறுமலர்ச்சிக்கால ஓவியர் யார்?..................................................................................................

28. N இனால் காட்டப்பட்டுள்ள புத்தர் சிலையானது குப்தர் காலத்தின் சிறந்த படைப்பாகும். இதன் பெயர் யாது?..................................................................................................

29. O இனால் காட்டப்பட்டுள்ள கிரேக்க சிலையின் கைகளில் இருந்ததாகக் கருதப்படும் பொருள் யாது?..................................................................................................

30 P இனால் காட்டப்பட்டுள்ள பிளாஸ்டிக்கினாலான படைப்பினை இனங்காண்க.

..................................................................................................

- **31 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்களிற்குரிய இடைவெளிகளில் பொருத்தமான விடை எழுதுக.**

31. அனுரதபுரத்திலுள்ள பங்குளிய புத்தர் சிலையின் வலது கையினால் விதர்க்க முத்திரையும் இடது கையினால் ............................................ முத்திரையும் காட்டப்படுகிறது.

32. சிகிரிய பெண் ஓவியங்களுடன் ஒப்பிடப்படும் அஜந்தாவின் அப்சரா ஓவியங்கள் ......................................................... இலக்க குகையில் காணப்படுகின்றன.


33. கொழும்பு றோயல் கல்லூரி நவரங்கஹல மண்டபத்திலுள்ள நாடகக் கலையைச் சித்திரிக்கும் சிற்பம் ........................................... ஊடகத்தினால் ஆக்கப்பட்டது.

34. நிசங்கமல்ல அரசனால் நிர்மாணிக்கப்பட்ட நிஸங்கலதா மண்டபத்தின் தூண்கள் பாதிமலர்ந்த ..................................... மலரின் வடிவத்தினைப் போல் அமைக்கப்பட்டுள்ளன.

35. பிரமாண்டமான அளவுகளில் பூங்காச் சிற்பங்களைப் படைத்த ஹென்றிமூர் எனும் கலைஞரது படைப்புகளில் உருவங்கள் ............................ பண்புகளுடன் ஆக்கப்பட்டுள்ளன.

➢ **36 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள சித்திரத்தை இனங்கண்டு, அவதானித்த கலைத்திறன்களை மதிப்பீடு செய்யக்கூடியதான ஐந்து வாக்கியங்கள் எழுதுக.**

(தனிச்சொல்லால் விடை அளித்தால் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)



36. தொனிப்பொருள் :

.................................................................................................................................................

37. கலைஞர் :

.................................................................................................................................................



kalvi.lk

*38. ஒழுங்கமைப்பு :*

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

*39. வர்ணப் பிரயோகம் :*

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

*40. உணர்வு வெளிப்பாடு:*

..........................................................................................................................................................................

(1X40 = 40புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන LMDUnit

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 (2023)**
**General Certificate of Education (Ord.Level) Third Term Examination- 2022 (2023)**

| நேரம்: 2.00 மணித்தியாலம் | **சித்திரக்கலை - II** | பாட எண் : 43 T II |
|---|---|---|
| பெயர் / சுட்டெண் ............................................................... | | |

**மிக முக்கியம்:-**
- விடைத்தாள் பின்பக்கத்தில் இடதுபக்க மேல் மூலையில் உங்கள் சுட்டெண்ணைத் தெளிவாக எழுதுக.
- பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும் போது உங்கள் வரைதல் தாள் உலர்ந்திருக்க வேண்டும்.
- பஸ்ரல்வர்ணம், நீர்வர்ணம் போன்ற பொருத்தமான ஊடகம் பயன்படுத்தலாம்.

<u>சுயாதீன ரேகைச் சித்திரம் வரைதல்</u>

- உங்களுக்கு முன்னாலுள்ள பொருட்களை அவதானிக்குக.
  1. பருமட்டான தாளைப் பயன்படுத்தி பூர்வாங்க பரும்படிப்படத்தை வரைக.
  2. நீங்கள் காணும் விதத்தில் பொருட்களை வரைந்து வர்ணந்தீட்டுக. இதற்கு வெள்ளை வரைதற் தாளைப் பயன்படுத்துக.
- இரண்டு வரைதல்களையும் ஒன்றாக இணைத்து மேற்பார்வையாளர்களிடம் ஒப்படைக்குக.
- உங்கள் வரைதலை மதிப்பிடும்போது பின்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்படும் என்பதைக் கவனத்தில் கொள்க.
  - **சுயாதீன ரேகை கற்கை** :-
    1. பரும்படியான தாளிலுள்ள பூர்வாங்க பரும்படிப் படத்தில் உரிய ஊடகத்தைக் கையாளும் உங்கள் திறன்.
  - **வர்ணச் சித்திரம்** :-
    2. தளத்துக்கு உகந்ததாக கலைநுட்பத்துடன் பொருட்கள் தொகுக்கப்பட்டிருத்தல்
    3. அளவிடைகள் , தூரநோக்கு, முப்பரிமாண அளவு பற்றிய உமது விளக்கம்
    4. தரப்பட்டுள்ள பொருட்களின் பண்புகளை எடுத்துக் காட்டல்.
    5. வர்ண ஊடகங்களைக் கையாளும் திறன்
    6. ஒட்டு மொத்த நேர்த்தியும் பொருத்தமான பின்னணியும்.

**மிகமுக்கியம்** :
பொருட்களின் தொகுதியை வைத்துள்ள பலகையைப் பெரிய அளவில் வரையத் தேவையில்லை. பலகையின் அளவைப் பொருள்களின் தொகுதிக்குப் பொருந்தும் முறையில் சீராக மாற்றி வரைவதற்கு உங்களிற்கு சுதந்திரம் உண்டு.

(30புள்ளிகள்)


kalvi.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 (2023)
General Certificate of Education (Ord.Level) Third Term Examination- 2022 (2023)

| நேரம்: 2.00 மணித்தியாலங்கள் | சித்திரக்கலை - II | பாட எண் : 43 T II |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ....................................................................

## ஆசிரியர்களுக்கு மட்டும் பொருட்கூட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கான அறிவுறுத்தல்

1. பொருட்கூட்டத்தை ஒழுங்குபடுத்தும் மேசை 73cm உயரமுடையதாக இருக்க வேண்டும்.
2. பொருட்கள் யாவும் கண்மட்டத்திற்கு சற்றுக்கீழாகவும் செடி கண்மட்டத்தில் இருக்குமாறு ஒழுங்குபடுத்துக.
3. ஆதாரப்பலகையினை பொருள் ஒழுங்கிற்கு ஏற்ற அளவில் பொருத்தமாக பயன்படுத்துக.
4. ஒரு பொருட்கூட்டத் தொகுதியினை வரையும் மாணவர்கள் 2m இற்கு குறையாத தூரத்திலும், 4m இற்கு மேற்படாத தூரத்தில் அமர்வதை கருத்தில் கொள்க.
5. ஒரு தொகுதியில் ஆகக்கூடியது 15 மாணவர்களுக்கு மேல் இருத்தல் கூடாது.

.

## பொருட்கூட்டம்



தேவையான பொருட்கள்

1. பிஸ்கேற்பெட்டி (25x20x10) வெள்ளை டிமைற் தாளினால் ஒட்டிவிடுக.
2. மண்பானை
3. பிளாஸ்டிக் யக்
4. சீத்தைத்துணி
5. குறோட்டன் கிளை
6. சுருட்டப்பட்ட A4 தாள் (வெள்ளை)



kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 (2023)**
**General Certificate of Education (Ord.Level) Third Term Examination- 2022 (2023)**

| நேரம்: 2.00 மணித்தியாலம் | சித்திரக்கலை - III | பாட எண் : 43 T III |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ...............................................................

**“அ ” பகுதி அல்லது “ஆ ” பகுதி அல்லது “ இ ” பகுதியில் ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்து வரைந்து வர்ணம் தீட்டுக..**

### பகுதி “அ ”- கருத்துவெளிப்பாட்டுச் சித்திரம்

1. இரவு நேரத்தில் வழிபாட்டுத்தலம் ஒன்றில் பக்தர்கள் வழிபாட்டிலீடுபடும் காட்சி.
2. நீர் நிலையமொன்றில் கூட்டமாக நீரருந்தும் விலங்குகள்.
3. கிராமிய விளையாட்டொன்றின் மனங்கவர்ந்த சந்தர்ப்பம்.
4. கிராமத்தினுள் புகுந்த யானைக் கூட்டம்.

### பகுதி “ஆ ”- அலங்காரச்சித்திரம்

5. ஆக்கபூர்வமான உருக்களைக் கொண்டு கட்டில் விரிப்புக்கான 6 x 3 அடி அளவு கொண்ட அலங்காரம் ஒன்றினை வரைக. (கடதாசியின் பரிமாணத்துக்கு ஏற்றவாறு திட்டமிடுக.)
6. சீத்தைத் துணியொன்றை அச்சுப் பதிப்பதற்காக பரவலடையும் விதத்தில் 9” x 9” அங்குல அளவுடைய அலங்காரப் பகுதியொன்றை செவ்வரத்தம் பூ இலைகளைக் கொண்டு நிர்மாணிக்குக..
7. பாரம்பரிய அலங்கார அலகுகளைப் பயன்படுத்தி 8”x 8” அங்குல அளவுடைய குஷன் கவர் ஒன்றுக்கான அலங்காரம் ஆக்குக.

### பகுதி “ இ ”- கிரபிக்சித்திரம்

8. மரநடுகையின் முக்கியத்துவத்தினை விளக்கும் “பசுமையான நாடு” எனும் தலைப்பில் வர்ணச்சுவரொட்டி ஒன்றினைத் தயாரிக்குக.
9. பழக்கலவைப் போத்தல் ஒன்றிற்கான விளம்பரம் செய்யும் வகையில் மேலுறை ஒன்றை அமைக்குக.
10. கொடிய டெங்கு நோயின் தாக்கமும், அதனைத் தடுக்கும் வகையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை வெளிக்காட்டும் சுவரொட்டி ஒன்றினை வடிவமைக்குக.

*(30 புள்ளிகள்)*


kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page